ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2184/46 - 2020 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2020.07.17

2184/46 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: MTR/ LND/LI/ AQUI/ 3998.
காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்:
4-3/ 09/ 2017/ WS/ 459.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**
தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 427, நாவிமன தெற்கு கிராம அலுவலர் பிரிவின், ஹுங்கங்கொட கிராமத்தில் அமைந்துள்ளதும், முற் பிரதிப்பட இலக்கம் மாற/ 2835 படத்தில் துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ள மேற்குறித்த காணி மாத்தறை - iv ஆவது கட்ட நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நில்வலா நதிக்கு குறுக்கே உப்பு வடிகால் முட்டுக்கட்டை யொன்றை அமைப்பதற்கு மேலதிக காணியை எடுத்துக்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

**அட்டவணை**

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர்: பரமகெஞ்ஞகெட்டிய; விபரம்: திறந்த வெற்றுக் காணி; உரிமை கோருபவர்: ஆரம்ப உரிமை கோருபவர் தெரியவில்லை; விஸ்தீரணம்: 0.113 ஹெக்டயார்

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில்


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாத்தறை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தீபிகா கே. குணரத்ன,
பிரதேச செயலாளர்,
மாத்தறை.

பிரதேச செயலகம்,
மாத்தறை,
2020, யூலை 14.

07 - 862

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.